ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1787/26 - 2012 දෙසැම්බර් මස 05 වැනි බදාදා - 2012.12.05
*1787/26 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் யட்டியந்தோட்டை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டமையால் யட்டியந்தோட்டை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

அண்ணாமலை பாஸ்கரன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், யட்டியந்தோட்டை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. கே. ஏ. பிரேமசிங்ஹ என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது யட்டியந்தோட்டை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தலங்கம அப்புஹாமிலாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. கே. ஏ. பிரேமசிங்ஹ என்பவர் யட்டியந்தோட்டை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ரீ. ஏ. சீ. என். தலங்கம,
தெரிவத்தாட்சி அலுவலர்,
யட்டியந்தோட்டை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கேகாலை,
2012, நவெம்பர் 30.

12 - 539

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.